1967 ஜூலை 10]

(இ) எத்தனை வகையான மாடுகள் பண்ணையில் இருக்கின்றன?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: அதன் மூலம் கிடைக்கும் பாலின் மொத்த அளவு எத்தனை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தனிக் கேள்வி போடவும்

THIRU K. VINAYAKAM: On a point of order, Sir. The point of order is this. Whenever a question is tabled, we get an oral answer. But when a paper is circulated, if it is sent to us a day before, it will enable us to consume, assimilate and ask questions. Will the Hon. Speaker make arrangements to have it delivered at our residence?

MR. SPEAKER: I will permit the hon. Members to put supplementary questions, on this question, tomorrow.

புயல் நிவாரணம்

* 231 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு கடைசியில் அடித்த புயலின் காரணமாக ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு என்ன?

(இ) எத்தனை பேர்கள் மாண்டார்கள்? எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்?

(உ) அதற்கான நஷ்ட ஈடு ஏதேனும் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) (1) சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு—

முழுதும் சேதமடைந்த வீடுகளின் மதிப்பு ரூ. 2,35,28,300.

ஓரளவு சேதமடைந்த வீடுகளின் சேத மதிப்பு ரூ. 15,000.

(2) பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம்—

பாதிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பு ரூ. 2,39,75,500.

(3) பொது மக்களின் பணிக்கென உள்ள வசதிகளுக்கு ஏற்பட்ட சேத மதிப்பு ரூ. 89,39,800.

(இ) (1) மாண்டவர்களின் எண்ணிக்கை 99.

(2) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13,52,100.

(உ) (1) அரிசியும், உணவுப் பொட்டலங்களும் இலவசமாக வழங்கிய வகையில் ரூ. 49,100.

(2) அனுமதிக்கப்பட்ட ரொக்க மானியம் ரூ. 96,53,378.

(3) இலவசமாக துணிகள் வழங்கிய வகையில் ரூ. 91,600.

(4) கடன்கள் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 15,54,000.

(5) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ. 3,68,355.

(6) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 3,33,578.

---

* 637–640 பக்கங்களில் III-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. என். சங்கரய்யா :** பெருஞ்சேதம் ஏற்பட்டிருப்பதால், அரசாங்கம் கொடுத்திருக்கும் நிவாரணம் போதாது என்று மீனவர்களிடமிருந்தும், விவசாயிகளிடமிருந்தும் முறையீடுகள் வந்திருக்கின்றனவா ? அவை பரிசீலிக்கப்பட்டனவா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக போதாது என்பதுதான் கருத்து. ஆனால், இது சம்பந்தமாக 783 லட்ச ரூபாய் நமக்குச் செலவாகும் என்றதில், மத்திய அரசிடமிருந்து கடனாகக் கிடைத்தது 2 கோடியும், மானியமாக 36 லட்சமும்தான். நம்முடைய நிதிநிலையை அனுசரித்து இந்தத் தொகைகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே, புயலால் பாதிக் கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை மொத்தம் எவ்வளவு ? சரிவர எல்லா மக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை, சென்னை நகரத்தில் 10,20,000-மும், செங்கற் பட்டு மாவட்டத்தில் 46,50,800-மும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 9,95,450-மும் தென்னார்க்காடு மாவட்டத்தில் 29,80,498-மும் ஆக மொத்தம் 96,46,870 என்று அறியப்பட்டிருக்கிறது.

**திரு. வி. டி. அண்ணாமலை :** பெருவணக்கத்திற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, சென்ற புயலால் வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் சில கிராமங்கள் வழங்கப்பட்ட நன்கொடை யையும், மானியத்தையும் பெறமுடியவில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அது சம்பந்தமாக மனுக்கள் கலெக்டரிட மும் கொடுக்கப்பட்டன. ஆகவே, அந்த மனுக்களைப் பரிசீலித்து, மானியம் வழங்க யோசனை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த விவரங்களை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் கனம் அங்கத்தினர் எடுத்துரைத் தால் பரிகாரம் தேட முயற்சிக்கும்.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே, அப்படிக் கொடுக்கப்பட்ட பணங்களில் ஒரு குடும்பத்திற்கு ரூ. 40 என்றும், ஒரு குடும்பத்திற்கு ரூ. 30 என்றும், இன்னும் வேறு குடும்பங் களுக்கு ரூ. 20, ரூ. 5 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறதே, இந்த பாரபட்சத்திற்குக் காரணம், புயல் நிலைமைக்கு ஏற்றவாறு அடித்ததா ? அதனால் ஏற்பட்ட பாரபட்சத்திற்கு ஏற்றவாறு பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறதா என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம். புயலின் பார பட்சத்திற்குத் தக்கபடி நிவாரணமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1967 ஜூலை 10]

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** சார், கொடுக்கப்படும் நிவாரணம், நஞ்சை நிலங்கள், தோட்டங்கள், வீடுகள் என்று பாதிக்கப்பட்டவைகளின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா, அல்லது வேறு எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் சேதங்களுக்குத் தக்கபடி நிவாரணம் நிர்ணயிக்கப் படுகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் பகுதியைப் பொறுத்த வரையில், அதிகமான தென்னை மரங்கள், 1·5 லட்சம் வரை, எடக்கருடுப் பகுதியில் சேதம் அடைந்திருக்கின்றன. அந்தப் பகுதிக்கு 1,13,000 தென்னங் கன்றுகளை 50 சதவிகித விலையில் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஒவ்வொரு கன்றுக்கும் 50 பைசா வரையில் சப்சிடியாகக் கொடுக்க வேண்டுமென்று, கனம் உறுப்பினருடைய பகுதியைப் பொறுத்த வரையில், பிரத்தியேகமான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Sir, whereas cyclone and its havoc are considered to be acts of God and whereas the relief given to the cyclone-affected people is very negligible when compared to the colossal loss sustained by the human beings and their property, will the Government think of the possibility of reimbursing that loss from our own coffers instead of waiting for aid from the Central Government which do not seem to take a reasonable attitude in regard to this matter?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: God is not very kind to our coffers.

•

* 232 வினா.—திரு. க. இராமமூர்த்தி: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) திண்டிவனம் பகுதியில் 1966-ல் அடித்த கோர புயலுக் காக நிவாரணமாக அளித்த தொகை எவ்வளவு?

(இ) இதில் திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி யில் கொடுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(உ) இதில் இடிந்துபோன கூரை வீடுகளுக்கு கொடுக்கப் பட்ட தொகை எவ்வளவு?

(எ) இந்த குடிசைகளுக்கான புயல் நிவாரணத் தொகை புறம்போக்கு இடங்களில் கட்டியிருந்த குடிசைகளுக்கு கிடைக்காதது அரசாங்கத்திற்கு தெரியுமா?

(ஐ) ஆம் எனில், அவர்களுக்கும் இந்த நிவாரணத்தொகை கிடைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ரூ. 16,60,078·00.

(இ) ரூ. 1,86,910·00.

(உ) ரூ. 12,45,058·00.